# கருப்பு - சிவப்பு கொடி உயரப் பறக்கட்டும்! கழகம் என்றும் வெல்லட்டும்!



தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து தமிழ் மக்களின் உணர்வோடு கலந்திட்ட நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா ஆண்டு நிறைவடைகிறது. இந்த சிறப்புக்குரிய தருணத்தில், கலைஞரின் உடன் பிறப்புகள் ஒவ்வொருவரும், 'இல்லந்தோறும் கழகக் கொடி'யை ஏற்றிட வேண்டுமென கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதறிவோம்! அதனையடுத்து, கழக இளைஞர்அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "தந்தை பெரியாரின் கொள்கைகளை – பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களை – முத்தமிழறிஞர் கலைஞர் தந்த முழக்கங்களை, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் இன்னும் வலிமையோடு உயர்த்திப் பிடித்திட கழகத்தின் கறுப்பு – சிவப்புக் கொடியினை இல்லந் தோறும் ஏற்றிடுவோம். பழைய கொடிக்கம்பங்களைப் புதுப்பித்து, கழகத்தின் மூத்த முன்னோடிகளைக் கொண்டு கழகக்கொடி ஏற்றுவதோடு, அலுவலகங்கள் – வணிக வளாகங்கள் என நம் கழக உடன்பிறப்புகளுக்குச் சொந்தமான அத்தனை இடங்களிலும் கருப்பு – சிவப்புக் கொடி உயரப் பறக்கட்டும். கழகம் என்றும் வெல்லட்டும்!" என்று பதிவிட்டுள்ளார்.

# அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார்!

அரியலூர், செப், 11 -

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியத்தில்க ழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம், காட்டாத்தூர் கிராமம் சுவாதி திருமண மண்டபத்தில், ஒன்றிய அவைத் தலைவர் கா.பாலு தலைமையில், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.கலிய பெருமாள் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில்,

அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், க.சொ.க.கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஒன்றிய பொருளாளர் கிரேஸ்.சுப்ரமணியன், அன்பழகி முத்துகுமரன், பொ. கென்னடி, பி.கே.சஞ்சீவி குமார், பெ.தனசேகரன், இள.சிவமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட அணி அமைப்பாளர்கள் க.தர்மதுரை, கே.சி. லூயிகதிரவன், இ.பி.ஆர். செந்தில்குமார், பானுமதி இராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் விசாலாட்சி சிவக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கே.சி.தங்கராசு, சி.ராணி, பால்அருள்தாஸ், க.பாலமுருகன், டி.எம்.டி.அறிவழகன், சா.சேகர், க.இளவரசன், கழக வழக்கறிஞர் செல்ல. மணிமாறன், கா.அறிவழகன், மு.க.கருணாநிதி, இராமலிங்கம், தமிழ்அழகி, வீரனார். இராஜேந்திரன், ஆர்.ஜெயபால், க.ராஜேந்திரன், முடியரசி மாரிமுத்து, சுந்தரவடிவேல், பாக்கியராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் பூங்கோதை தன்ராஜ், சரோஜா காமராஜ், செந்தில்குமார், ராஜசேகர், செ.பிரதீப், செந்தமிழ்செல்வன், சா.சின்னப்பன், விஜயகாந்த், சா. ரமேஷ், கமலாதேவி, இராமு, சின்னதுரை, இராஜவன்னியன், இராசேந்திரன், இந்திராணி, திலகவதி, மணி, செந்தில், சிலம்பரசன், ரமேஷ், ஜான்போஸ்கோ மற்றும் மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக ஒன்றிய துணை செயலாளர் இ.பி. ஆர். செந்தில்குமார் நன்றி கூறினார்.



அண்ணா கிராமம் ஒன்றிய கழகம், தொரப்பாடி பேரூர், மேல்பட்டாம்பாக்கம் பேரூர் ,கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் பி.எம்.சங்கர் தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர், அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன் வரவேற்புரையாற்றினார் . அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார் . இக்கூட்டத்தில் மாவட்ட,ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. பவள விழா ஆண்டு



# தி.மு.க. முப்பெரும் விழா!



வேர்களையும் விழுதுகளையும் போற்றி மேருமலையென உயர்ந்து நிற்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

உயர்விலும் தாழ்விலும் தோளோடு தோள் நின்று கழகம் காத்த தீரர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி நன்றியின் அடையாளத்தைக் காட்டும் செயலை தலைவர் கலைஞர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் துவக்கி வைத்தார்கள்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் - பேரறிஞர் பெருந்தகை அண்ணா – தமிழினத் தலைவர் கலைஞர் பெயரிலான விருதுகள் கழகக் காப்பாளர்களுக்கு 1985 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

2008 ஆம் ஆண்டு முதல் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் விருதும், 2018 ஆம் ஆண்டு முதல் இனமானப் பேராசிரியர் விருதும் வழங்கப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75 ஆண்டு பவளவிழாவைக் கொண்டாடும் சிறப்புமிகு காலத்தில் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சியில் அமரவைத்து இந்தியாவே போற்றிவரும் திராவிட மாடல் ஆட்சியை நடத்திவரும் கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் பெயரிலான பெருமைமிகு விருதை இந்த ஆண்டு முதல் வழங்குவதில் தலைமைக் கழகம் பெருமை அடைகிறது.

### இந்த ஆண்டுக்கான

### "மு.க.ஸ்டாலின் விருது"



**தஞ்சை திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம்**

அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**தலைமைக் கழகம்**

நாள்- 09.09.2024 தி.மு.க.

முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் – விடுதிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களின்

# கல்வி வளர்ச்சி - பன்முகத் திறனை வெளிக்கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகள்!

## அடிப்படை ஆதாரமற்ற அறிக்கை வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவருக்கு - அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலறிக்கை!



சென்னை, செப். 11 -

ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவர்களை பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கும் அரசுக்கு கண்டனம் எனும் தலைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் 08.09.2024 அன்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பாக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் விடுத்துள்ள மறுப்பறிக்கை வருமாறு:-

பட்டியல் மற்றும் பழங்குடியின மக்கள் மீது வன்கொடுமை குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க மாநில அளவில் IG தலைமையிலும் மாவட்டங்களில் DSP தலைமையிலும், சமூக நீதி மற்றும் கண்காணிப்புக் பிரிவு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் ஆதி திராவிடர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் 1331 விடுதிகளில் 98,909 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களின் நலன் காக்க இவ்வரசு பல்வேறு விரிவான திட்டங் களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. விடுதிகளில் பழுது/பராமரிப்பு பணிகளுக்காக கடந்த காலங்களில் ஆண்டுதோறும் ரூபாய் 6 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த நிலையில், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் சிறப்பு பராமரிப்பு பணிக்காக கூடுதல் நிதி ரூ25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழக்கமான நிதி ரூ1.0 கோடியும் சேர்த்து ரூ.35 கோடி மதிப்பீட்டில் 366 விடுதிகளில் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விடுதிகளுக்கு சென்று பார்த்தாலே கடந்த பத்து ஆண்டு களில் முந்தைய ஆட்சியைப் போல் அல்லாமல் மிகச்சிறப் பாக பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு வந்திருப்பதை கண்கூட அறிய முடியும்.

இதன் தொடர்ச்சியாக இத்துறை வரலாற்றிலேயே முதல் முறையாக நடப்பு 2024-2025 ஆம் ஆண்டில் பழுது/பராமரிப்பு பணிகள் தேவைப்படும் அனைத்து விடுதிகளுக்கும் சிறப்பு பராமரிப்பு பணிகளுக்காக ரூ.100 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு, 520 ஆதிதிராவிட நல விடுதிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் தாட்கோ மூலம் துவங்கப்பட உள்ளன. இதில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மயிலாப்பூர் மாணவர் விடுதிக்கு ரூ.19 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர மாணாக்கர்களுக்கு தனியார் விடுதிகளுக்கு இணையாக அனைத்து வசதிகளுடன் கூடிய முன்மாதிரி விடுதிகள் கட்டப்படும் என்ற அறிவிப்பின் கீழ் ரூ.44.50 கோடியில் சென்னை சைதாப்பேட்டை எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி, ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் நீலகிரி போன்ற பெரு நகரங்களில் நவீன முன்மாதிரி விடுதிகள் அறிவிக்கப்பட்டு கட்டட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் அனைத்து கல்லூரி மாணவர் விடுதியிலும் தங்கி பயிலும் மாணாக்கர்களின் கற்றல் திறனை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் தனித் திறனை வளர்க்கும் விதமாக "Digital Signage Board" வழங்கப்பட்டு இணைய வழிக் கல்வியும் இணையவழியில் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்திற்கும் மேலாக இவ்வரசு பொறுப்பேற்றவுடன் விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கும் மாதாந்திர உணவு கட்டணம் பள்ளி மாணவர்களுக்கு ரூ.1000 லிருந்து ரூ.1400 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1100லிருந்து ரூ.1500 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாணாக்கர்களுக்கான மாதாந்திர பல்வகை செலவின தொகை பள்ளி மாணவர்களுக்கு ரூ.50லிருந்து, ரூ.100 ரூபாயாகவும் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.75 லிருந்து ரூ.150 என இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு மாணாக்கர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரை பொறுத்த வரை மொத்தமுள்ள 19 விடுதிகளுக்கு இரண்டு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மயிலாப்பூர் கல்லூரி மாணவர் விடுதிக்கு தினந்தோறும் சைதாப் பேட்டை எம்.சி ராஜா மாணவர் விடுதியில் இருந்து மாணாக்கர் எண்ணிக்கைக் கேற்ப சரியான அளவில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவானது சரியான அளவு மற்றும் தரத்தில் உள்ளதா என்பதனை கண்காணிக்க தனியாக ஒரு செயலி ஏற்படுத்தப்பட்டு தினந்தோறும் அச்செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது இது சரிதானா என்பதனை அவ் விடுதியில் தங்கியுள்ள மாணாக்கர்களே சரிபார்க்க முடியும். மாணாக்கர் களின் எண்ணிக்கை சரியாக உள்ளதா என்பதனை கண்காணிக்க 1331 விடுதிகளிலும் ரூ.27 கோடி மதிப்பீட்டில் CCTV Camera மற்றும் Bio Metric கருவிகள் பொருத்தும் பணியானது நடைபெற்று வருகிறது மேலும் அறிக்கையில் குறிப்பிட ப்பட்டுள்ள ஆதி திராவிடர் நலத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியானது திருப்பி அனுப்பப்படுகிறது என்பது தவறான செய்தியாகும். 2023-2024 ஆம் நிதியாண்டில் இதுவரை 97.6% செலவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் அறிக்கையானது அடிப்படை ஆதாரங்கள் இல்லாததாகவும் திசை திருப்பும் வகையிலும் வெளியிடப்பட்டுள்ளது இவ்வரசு பொறுப்பேற்ற பின் ஆதிதிராவிட நல மாணவர் விடுதிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் பன்முகத்திறனை வெளிக் கொண்டுவர பல்வேறு நடவடிக்கைகளை சீரிய முறையில் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில் நேற்று முன்தினம் (09.09.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு, 388 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு உட்பட பலர் உள்ளனர்.